# ஹக்மன பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஆகஸ்ட் 02 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூலை 13 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 19 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, ஹக்மன பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஹக்மன பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியின் கூட்டுத்தொகையில் ரூபா 23,951,536 தொகையான வருமானங்களும் ரூபா 25,000,786 கூட்டுத்தொகையான செலவினங்களும் கைவிடப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் சபைக்கு நன்கொடையாகக் கிடைத்த கலி பவுசர், டெக்ரர் மற்றும் ரேலர் மற்றும் தண்ணீர் பவுசர் என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிராததுடன் இந்த வாகனங்கள் நிலையான சொத்துப் பதிவேட்டிலும் பதியப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் 03 செலவின விடயங்களுக்குரிய ரூபா 61,353,852 தொகையான செலவினம் மூலதனச் செலவினப் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

12 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 22,901,604 ஆக இருந்ததுடன் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 22,573,964 ஆனமையால் ரூபா 327,640 வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சியிருந்த கிடைக்கவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,992,836 ஆக இருந்ததுடன் செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 55,928,949 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 96,318,835 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம்

ரூபா 1,049,250 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 626,428 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 401 | 397 | 805 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 54 | 763 | 1 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 104,438 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 3,395,639 |

### 2.2.3 நீர்க் கட்டணம்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 835 நீர்ப்பாவனையாளர்களிடமிருந்தும் ரூபா 1,073,071 தொகை நிலுவை மீதியாக இருந்ததுடன் அந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் அல்லது வழங்கல்களைத் துண்டிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 ஆதனவரி

சபை அதிகாரப் பிரதேசத்தில் ஆதனவரி அறவிடப்படுகின்ற 1460 வீட்டுப் பாவனையாளர்களும், 118 வணிகப் பாவனையாளர்களும், 38 அரசாங்க ஆதனங்களுக்குரிய 1616 பாவனையாளர்களினதும் எண்ணிக்கையினைக் கொண்டிருந்தது. 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதிவேட்டின் பிரகாரம் ரூபா 582,133 தொகை நிலுவை மீதியாகும்.

## 2.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) தலைவர், உப தலைவரை உள்ளடக்கிய 08 உறுப்பினர்களும் 2012 ஆம் ஆண்டின் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வெளிப்படுத்துகையைச் சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து பதவியணியினர் சம்பளம் மற்றும் உறுப்பினர் படிகளாக ரூபா 8,844,000 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் சம்பளச் செலவினம் ரூபா 14,730,687 ஆனமையால் சபை நிதியத்திற்கு ரூபா 5,886,687 தொகையான மேலதிக செலவினப் பொறுப்பு ஏற்பட்டிருந்தது.

(இ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,976,108 ஆக இருந்தது.

## 2.4 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்